# என்றும் உங்களுடன் இருப்போம் தலைவரே!



அஞ்சுகச் செல்வரின் அருந்தவப் புதல்வனே!
அரசியல் செருக்க ளத்தில்
ஆயிரம் நெருக்கடி வந்தாலும் சந்திக்கும்
ஆளுமை மிக்க தலைவா!
செஞ்சுடர்க் கதிர்போலும் வெஞ்சமர்க் களம்காணும்
சிங்கமே! தோளு யர்த்து!
சினவேங்கை நடைபோடும் இனமான வீரர்தம்
சேனையை வழிந டத்து!
கொஞ்சுதமிழ்க் கலைஞரின் நெஞ்சுரம் பெற்றவன்!
குறுக்கிடும் தடைத கர்த்துக்
குரைப்பவர் வசைஅள்ளி இரைப்பவர் நாணவே
கொள்கைத்தேர் நீசெ லுத்து!
வஞ்சகரின் சதிவலை அறுத்தெறி! சிலிர்த்தெழு!
வைகறை இருள்கி ழித்து
வழிகாட்டு! நிலமெங்கும் ஒளியேற்று! தமிழர்தம்
வரலாற்றை நிலைநி றுத்து!

காலத்தின் கொடையான கல்வியைத் தொழில்நுட்பக்
கலையினைப் போற்றி நின்றாய்!
கவின்மிகும் ஆட்சியால் உலகத்தின் பார்வையில்
கழகத்தை ஏற்றி நின்றாய்!
கோலச்செந் தமிழ்எங்கள் உயிர்,உணர் வென்றுநீ
குறிக்கோளைச் சாற்று கின்றாய்!
குப்பத்தைச் சேரியைக் கூர்மிக்க தாம்அறிவுக்
கோட்டையாய் மாற்றி நின்றாய்!
மூலத்தை வேர்களின் ஆழத்தைப் பழந்தமிழ்
மொய்ம்பினை உணர்த்தி வைத்தாய்!
முதுகு வளைந்தவர் தண்டு வடங்களை
முறுக்கேற்றி நிமிர்த்தி வைத்தாய்!
ஞாலத்தில் இப்படிஓர் தலைவன்,எக் கட்சிக்கும்
நாடெங்கும் வாய்ப்ப தில்லை!
நட்டம் உனக்கில்லை! நாளை விடியும்!எங்கள்
நம்பிக்கை தோற்ப தில்லை!

இன்றல்ல! நேற்றல்ல! "எழுபத்தே ழாண்டுகள்"
இடர்பல கண்ட கழகம்!
ஏச்சுக்கும் திராவக வீச்சுக்கும் அஞ்சாமல்
எதிர்மோதி வென்ற கழகம்!

ஒன்றல்ல! இரண்டல்ல! உடுக்கள்போல் வடுக்களை
உடம்பெங்கும் கொண்ட கழகம்!
உட்பகை, வெளிப்பகை அத்தனையும் தூளாக்கி
உலாவரு கின்ற கழகம்!
குன்றல்ல! மிகப்பெரும் மலைகளை நொறுக்கியே
கோட்டைக்குச் சென்ற கழகம்!
குனியாமல் எவருக்கும் பணியாமல், செம்மாந்து
கோலோச்சி நின்ற கழகம்!
கன்றல்ல நடுதற்கு! விழுதூன்றி வேர்விட்டுக்
காலூன்றி நிமிர்ந்த கழகம்!
காளான் குடைக்குக்கீழ் முளைக்கின்ற புற்களா
கழகத்தை வீழ்த்த முடியும்?

இழுக்காகி மனமெங்கும் அழுக்காகிப் போனவர்,நம்
இயக்கத்தைத் தூற்றி வரலாம்!
"இலட்சிய மறவன்"நின் "நல்லாட்சி" பொறுக்காதோர்
எரிச்சலில் பேட்டி தரலாம்!
பழுக்கின்ற இடம்தேடிக் கொழுக்கின்ற பேர்கள்,உன்
பாதையில் முட்கள் இடலாம்!
பரம்பரைக் குணம்விட்டுப் போகாத ஏடுகள், பொய்ப்
பரப்புரை அவிழ்த்து விடலாம்!
வழக்கம்போல் இங்கொரு நரிக்கூட்டம், இருட்டுக்கு
வரவேற்பு மாலை யிடலாம்!
"வானத்துச் சூரியன்" காணாமல் போகும்என
வாலாட்டி ஊளை யிடலாம்!
கிழக்கின் வெளிச்சம்நீ! நன்றிகொன் றாருக்கும்
கிளம்பினாய் நன்றி சொல்ல!
கீழ்வானம் சிவக்கும்!என் தலைவா!யார் உள்ளார்?உன்
கீர்த்தியை இங்கு வெல்ல?

எண்ணற்ற களங்கள்!நம் எதிரிகள், துரோகிகள்
இணைகின்ற காட்சி அறிவோம்!
எங்கேயோ ஒளிந்துகொண்டு அம்புகளை நம்மீதில்
எறிகின்ற சூழ்ச்சி அறிவோம்!
கண்ணுக்குள் மணிபோலும் கட்சியை, ஆட்சியைக்
காத்துநீ நடந்த தறிவோம்!
கடக்கும் இதுவும்!உன் வரவுக்குத் திசையெட்டும்
காத்துக் கிடக்கும் அறிவோம்!
அண்ணாவைக் கலைஞரை உள்வாங்கிக் கொண்டநின்
ஆழ்மன உறுதி அறிவோம்!
அன்னைநம் தமிழுக்கும் தமிழர்க்கும் உனையன்றி
யார்இங்கே காவல்? அறிவோம்!
உண்ணாமல் உறங்காமல் உழைக்கும்நின் தியாகத்தை
ஒருபோதும் நெஞ்சில் மறவோம்!
உயிர்வேண்டும் என்றாலும் தருவோம்! இறுதிவரை
உன்னோடு நாங்கள் வருவோம்!

... கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**



## வாட்ஸ் அப்பில் வலம் வருகிறது!




## உதய சூரியன் சின்னத்தில் நின்று வெற்றி பெற்ற தோழமைக் கட்சியினர்



**தி.மு.ராஜேந்திரன்**
ம.தி.மு.க. (கடையநல்லூர்)



**செந்தில்செல்வன்**
ம.தி.மு.க. (சீர்காழி)



**ஜவாஹிருல்லா**
ம.ம.க. (நாகப்பட்டினம்)



**கே.நித்யானந்தன்**
கொ.ம.தே.க. (பொள்ளாச்சி)



**தமிமுன் அன்சாரி**
ம.ஜ.க. (சிதம்பரம்)

### மேற்கு வங்கத்தில் பா.ஜ.க.வினர் வன்முறை வெறியாட்டம்!

## தோழர் லெனின் சிலை உடைப்பு - கட்சி அலுவலகங்கள் மீது தாக்குதல்!

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையான கண்டனம்!

சென்னை, மே.7-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

மேற்கு வங்கத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி எஸ்.ஐ.ஆர். செயல்முறை வாயிலாக முறைகேடாக வெற்றி பெற்றதையொட்டி, அம்மாநிலத்தில் வன்முறைச் சம்பவங்களில் பாஜக குண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக, எதிர்கட்சிகளின் அலுவலகங்கள், கொடிக் கம்பங்கள், தோழர்கள் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

முர்ஷிதாபாத் மாவட்டத்தில் அமைந்துள்ள உலகத் தொழிலாளர்களின் ஒப்பற்ற தலைவர் மாமேதை தோழர் லெனின் சிலையை உடைத்துள்ளனர். அதேபோன்று, திரிபுரா மாநிலத்திலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவல கங்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். பாஜக குண்டர்களின் இந்த அராஜக வன்முறை தாக்குதல்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

பாசிச சக்திகள் லெனின் சிலையை சேதப்படுத்தினாலும் அவரது சித்தாந்ததை ஒருபோதும் அழிக்க முடியாது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக் காட்ட விரும்புகிறது.

தோழர் லெனின் சிலையை உடைத்து, எதிர்கட்சி அலுவலகங்ளையும், தோழர்களையும் தாக்கி வன்முறை நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் பா.ஜ.க. குண்டர்களை அம்மாநில காவல்துறை உடனடியாக கைது செய்து அமைதியை ஏற்படுத்திட வேண்டுமெனவும், பா.ஜ.க.வினரின் இந்த அராஜக வன்முறை வெறியாட்டங்களை கண்டித்து ஜனநாயக சக்திகள் தங்களது வலுவான கண்டன குரலை எழுப்பிட வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கமயூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை

## 38 ஆக உயர்த்த ஒன்றிய அரசு முடிவு!

புதுடெல்லி, மே.7-

இந்தியாவின் உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உள்பட நீதிபதிகளின் எண்ணிக்கையை 38 ஆக உயர்த்த ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போது தலைமை நீதிபதி மற்றும் 33 நீதிபதிகள் உள்ளனர்.

அடுத்த பாராளுமன்ற கூட்டத் தொடரின்போது மேலும் 4 நீதிபதிகள் கூடுதலாக சேர்க்கப்படுவதற்கான மசோதா கொண்டு வரப்படும் என்று ஒன்றிய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் மசோதாநிறைவேற்றியபின் எண்ணிக்கை38ஆகஉயரும். 1956ன் உச்சநீதி மன்றம் சட்டத்தின்படி தலைமை நீதிபதியை தவிர்த்து அதிகபட்சமாக10நீதிபதிகள் இருக்கலாம்.

1960ல்திருத்தம்கொண்டுவரப்பட்டு அது 13 ஆக அதிகரிக்கப்பட்டது. பின்னர் 17 ஆக உயர்த்தப்பட்டது.

1986ல்திருத்தம்கொண்டுவரப்பட்டது 25 ஆக உயர்த்தப்பட்டது. 2009ல் புதிய திருத்தம் கொண்டுவரப்பட்டு 30 ஆக அதிகரிக்கப்பட்டது.

கடைசி யாக தலைமை நீதிபதியை தவிர்த்து 33 நீதிபதிகளாக உயர்த்த 2019ல் திருத்தம் கொண்டுவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க

## திருவள்ளூர் மேற்கு மாவட்டம் மணவாள நகரில் இன்று நீர் மோர் பந்தல்!

### தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் ஏற்பாட்டில்!

சென்னை,மே.7-

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் ஏற்பாட்டில் கோடை வெப்பத்தின் தாக்கத்தை தணிக்க பொதுமக்களுக்கு நீர் மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் வெங்கத்தூர் ஊராட்சி மணவாள நகர் ஒன்றிய கழக அலுவலகம் அருகில் இன்று (07.05.2026 - வியாழக் கிழமை) காலை 10.00 மணி அளவில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் க. திராவிடபக்தன் தலைமையில், கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே. அரிகிருஷ்ணன் முன்னிலையில், தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான வி.ஜி.இராஜேந்திரன் திறந்து வைக்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் மாவட்ட, ஒன்றிய, கிளை அளவிலான அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் பங்கேற்க உள்ளனர்.





சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் வாக்காளர்களுக்கு 142வது வட்டத்தில் கலைஞர் பொன் விழா வளைவு அருகே தொடங்கி 142 அ வட்டம், 140 அ வட்டம், 140 வட்டம், 139 வட்டம், 139 அ வட்டம் ஆகிய வட்டங்களில் அனைத்துத் தெருக்களிலும் மா.சுப்பிரமணியன் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் நன்றித் தெரிவித்தார். இந்நிகழ்வில் பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம்கவி, மாவட்ட தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், களக்காடி எல்லப்பன், ம.தி.மு.க மாமன்ற உறுப்பினர் ப.சுப்பிரமணி, வட்டக் கழகச் செயலாளர் தா.மோகன்குமார் எம்.சி., உள்ளிட்ட ஏராமான தி.மு.கழகத்தினர், மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியினர் கலந்துகொண்டனர்.